REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2020 நவம்பர் 20 வெள்ளிக்கிழமை

தினகரன்

THINAKARAN

வரு. 88 இல. 276 | November 20, Friday, 2020 | 24 பக்கங்கள் | 30/-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று (19) பாராளுமன்றத்திற்கு விஜயம் செய்தார். அமைச்சர் தினேஸ் குணவர்தன ஜனாதிபதியை வரவேற்பதை படத்தில் காணலாம். புதிய பாராளுமன்றத்தின் ஆரம்பக் கூட்டத் தொடரில் உரையாற்றிய பின்னர் ஜனாதிபதி சபைக்கு வருகைதந்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சாட்சியங்களின்

வாக்குமூலங்களை வழங்க கோரிய சட்ட மாஅதிபர்

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தலைவரிடம், ஆணையகத்தினால் பதிவு செய்யப்பட்ட சில சாட்சியங்களின் வாக்குமூலங்களை வழங்குமாறு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா கோரிக்கை விடுத்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு எதிரான

06

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் 75 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு கொழும்பு புதிய கதிரேசன் ஆலயத்தில் நடத்தப்பட்ட பூஜையில் வழங்கப்பட்ட பிரசாத கட்டை கடற்றொழில் மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஜயராம மாவத்தையில் அமைந்துள்ள பிரதமரின் இல்லத்தில் வைத்து பிரதமரிடம் கையளிப்பதையும் கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபுசர்மா பிரதமருக்கு பொன்னாடை போர்த்தி ஆசீர்வாதம் வழங்கியதையும் காணலாம்.

விஹாரைகளுக்கு சில் துணி பகிர்ந்தளிப்பு விவகார வழக்கு;

லலித் வீரதுங்க, அனுஷ பெல்பிட்ட நிரபராதிகள் என தீர்ப்பளித்து விடுதலை

மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அதிரடி தீர்மானம்

லோரன்ஸ் செல்வநாயகம்

சில் துணி விவகார வழக்கில் குற்றவாளியாக்கப்பட்டிருந்த லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சில் துணி விவகார வழக்கு தொடர்பில் குற்றவாளியாக்கப்பட்டு கொழும்பு உயர்நீதிமன்றம் வழங்கிய மூன்று வருட சிறைத் தண்டனை மற்றும் தண்டப் பணத்திலிருந்து பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட ஆகியோரே அந்த குற்றங்களிலிருந்து நிரபராதியாக்கப்பட்டு நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இவ்வாறு விடுதலையளித்து தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2015 ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நாடளாவிய ரீதியில் விகா

தனிமைப்படுத்தப்பட்ட சில பகுதிகள் விரைவில் விடுவிப்பு

அடுத்த வாரமளவில் என்கிறார் இராணுவத் தளபதி

கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகள் தவிர்ந்து தனிமைப்படுத்தப்பட்ட ஏனைய பிரதேசங்களை அடுத்த வாரமளவில் விடுவிப்பதற்கு அவதானம் செலுத்தப்பட்டு வருவதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இந்த காலப்பகுதியில் விடுவிப்பதா? இல்லையா? என்பது தொடர்பிலான

06

பேனாவை பயன்படுத்துவது தொடர்பில் அவதானம்

பொலிஸார் விடுத்துள்ள எச்சரிக்கை

எந்தவொரு வணிக இடத்திலும் நுழையும்போது தங்கள் சொந்த பேனாவை எடுத்துச் சென்று பயன்படுத்துமாறு பொலிசார் பொது மக்களை வலியுறுத்தியுள்ளனர்.

இதன் மூலம் அவர்கள் தங்கள் விவரங்களை நுழைவாயிலில் உள்ள பதிவு புத்தகத்தில் பாதுகாப்பாக பதிவு செய்யமுடியும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மாஅதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

06

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்த

நாட்டிலுள்ள அனைத்து பாட எதிர்வரும் 23ஆம் திகதி திறக்

லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

கொரோனா வைரஸ் தொற்று சூழ்நிலையை கருத்திற்கொண்டு மேல் மாகாணம் உள்ளிட்ட தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேச பாடசாலைகள் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை கல்வி நடவடிக்கைகளுக்காக திறக்கப்படும் என கல்வி, பேராசிரியர் ஜி.எல்.பிரிஸ் தெரிவித்து நேற்றைய தினம் அது தொடர்பில் கல்வி அமைச்சர் பேராசிரியர் பிரிஸ்;

மூன்றாம் தவணைக்காக நவம்பர் 9ஆம் திகதி பாடசாலைகளை திறப்பதற்கு அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது. எனினும் நாட்டில்

06

...ரின் இறுதி ...யாதையுடன்

...பற்றி நடைபெறும்

பின்பற்றியும் நடைபெறும் என ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

மேலும் மறைந்த மகாநாயக்க தேரரின் இறுதிக்கிரியை நிகழ்வில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஊடகமான அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற

06

நாட்டுக்கும் மக்களுக்கும் கிடைத்த அதிஷ்டம் மஹிந்த

பிரதமருக்கு ஆளுநர் முஸம்மில் புகழாரம்

மாவத்தகம நினைகரன் நிருபர்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கு கிடைத்த அதிஷ்டம் என ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் 75ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டும், கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து நாட்டை பாதுகாக்கவும் வேண்டி

06

பேலியாகொடை மனிங் சந்தை (Manin Market) இன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படும். இது 1192 கடைகள், 600 வாகனங்கள் நிறுத்தக்கூடிய வாகன தரிப்பிட வசதி கொள்ளது. இங்கிருந்து அதிவேக நெடுஞ்சாலையூடாக நாடு முழுவதும் போக்குவரத்து செய்யக்கூடிய வசதியும் உள்ளது.

ரின் மீன்களுக்கு சில்லறை விலை 200 ரூபாவாக நிர்ணயம்

டக்ளஸ், பந்துல கலந்துரையாடி தீர்மானம்

அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் பந்துல குணவர்த்தன ஆகியோர் ரின் மீன்களுக்கான சில்லறை விலையை 200 ரூபாய் என நிர்ணயம் செய்துள்ளனர். அத்தோடு உள்ளூர் ரின் மீன் உற்பத்திகளை அதிகரிப்பதற்கு தேவையான பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று உறுதியளித்துள்ளனர்.

06

வறுமை ஒழிப்புக்கு ஆரம்ப புள்ளியான 2021 பட்ஜட்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பாராட்டு

2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நாட்டின் வறுமை ஒழிப்புக்கு ஆரம்ப புள்ளியாகும். இந்த வரவு செலவுத் திட்டத்தை முழுமையாக வரவேற்பதாக ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மீதான 02 ஆம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

06